**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 75 of 2022 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : செந்தில்குமார்

Father's Name : த/பெ. ராமசாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of December** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு இளம் வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பாரதிபுரத்தில் வசித்து டெம்போ வைத்து ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரி தாமரைகண்ணன் என்னுடைய வாகனத்தின் மீது மோதிய பின்னர் தான் அவர் குறித்து எனக்கு தெரியவந்தது. மற்ற எதிரிகள் அனைவரையும் சம்பவத்திற்கு பின்னர் தான் எனக்கு தெரியும்.

2. கடந்த 01.01.2020 ம் தேதியன்று காலை 9 லிருந்து 09.15 மணியளவில் நான் பாரதிபுரம் டெம்போ ஸ்டாண்ட், முத்துமாரியம்மன் கோவில் அருகே என்னுடைய

மகேந்திரா பிக்கப் வாகனம் பதிவெண் டிஎன் 37 சிகெச் 2260 வாகனத்தில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது டிஎன் 49 என 5959 என்ற மகேந்திரா ஸ்கார்பியோ கார் முக்குலத்தோர் புலிப்படை என்று எழுதப்பட்ட வாகனமானது பின்பக்கமாக ரிவர்ஸ் எடுக்கப்பட்டபோது என்னுடைய வாகனத்தின் முன்பக்கத்தில் மோதிவிட்டு நிற்காமல் சென்றது.

3. பின்னர் திருப்பி வந்து நிறுத்தியபோது நான் அவர்களிடம் ஏன் தம்பி இடித்துவிட்டு நிற்காமல் செல்கிறீர்கள் என்றும், ஒரு மன்னிப்பாவது கோரலாம் என்று நான் கேட்டேன். அதற்கு அவர் நான் முக்குலத்தோர் புலி படை என்றும், யார் என்று தெரியாமல் பேசுறீங்க என்று சொன்னார். அதன்பின்னர் நான் எதுவும் பேசவில்லை. உறவினர்கள் ஏறறி கொண்டு அந்த காரை எடுத்து சென்றுவிட்டார்.

4. 05.01.2020ம் தேதியன்று மாலை 5லிருந்து 6 மணியளவில் எனக்கு 9952664408 என்ற எண்ணிலிருந்து தொலைபேசியில் ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசியவர் வீட்டு சாமான்களை நடுபாளையம் பிரிவிலிருந்து இருகூருக்கு எடுத்து செல்ல வேண்டும் என்று கூறினார். மேலும் என்னை நடுபாளையம் பிரிவுக்கு வந்து நிற்குமாறு கூறினார். நான் நடுபாளையம் பிரிவுக்கு சென்று நின்றேன். என்னை அழைத்தவர் வருவதற்கு நேரமாகிவிட்டதால் நானும் முருகானந்தம் என்பவரும் அருகில் தேநீர் அருந்த சென்றோம்.

5. என்னை தொலைபேசியில் அழைத்தவர் மீண்டும் என்னை தொலைபேசியில் அழைத்து என்னை எங்கே நிற்கிறீர்கள் என்றும், என்ன நிற சட்டை அணிந்து உள்ளீர்கள் என்று கேட்டார். நான் ஆரஞ்சு நிற சட்டை அணிந்து நடுப்பாளையம் பிரிவில் நிற்கிறேன் என்று கூறவும் அவர் வந்துவிட்டதாக கூறினார். அவர் ஸ்கார்பியோ காரில் வந்தார். கதவை திறந்தவுடன் ஸ்கார்பியோ காருக்குள் இருந்தவர்கள் என்னை இழுத்துவிட்டார்கள்.

6. உள்ளே இருந்தவர்கள் என்னை கன்னத்தில் அடித்தும், குத்தவும் செய்தார்கள். அவர்கள் கன்னத்தில் அடிக்கவும் நான் என்னுடைய கைகளால் முகத்தினை மூடி கொண்டேன். அதனால் எதை பயன்படுத்தி அடித்தார்கள் என்று தெரியவில்லை. பின்னர் குமணன் என்பவருடைய தோட்டத்திற்கு என்னை கூட்டிட்டு போய் என்னை அடித்து குத்தினார்கள். கல்லை எடுத்து என்னை என் மீது போடவந்தார்கள். 2ம் எதிரி கார்த்தி என்பவர் தான் என்னை காப்பாத்தினார். என்னுடைய போன், பர்சை

பிடுங்கிகொண்டார்கள். 2ம் எதிரி கார்த்தி என்பவர் தான் போன், பர்சை வாங்கி கொடுத்தார்.

7. என்னை கெட்டவார்த்தையால் திட்டினார்கள். கொன்று விடுவோம். எறித்து விடுவோம் என்று கூறினார்கள். 1ம் எதிரி விக்னேஷ் தான் கல்லை எடுத்து போடவந்தார். குமணன் (3ம் எதிரி) அவருடைய செருப்பால் என் உடலில் எல்லா பாகத்திலும் அடித்தார். மீண்டும் அவர்கள் அவர்களுடைய வண்டியிலேயே ஏற்றி வந்த பள்ளபாளையம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் தள்ளி விட்டுவிட்டு, போலீஸ் கேஷ் என்று போனால் கொன்று விடுவேன் என்று 1ம் எதிரி என்னை மிரட்டினார். தேவடியா பயலே ஏதாவது பண்ணினா கொன்று விடுவேன்னு சொல்லிட்டு போயிட்டாங்க. என்னிடம் போன் இருந்ததால் என் நண்பர் சதீஸ்க்கு தகவல் கொடுத்தேன். அதன்பின்னர் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன்.

8. 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். என் மனைவி புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி ஆஜர். எதிரியின் இளம் வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை வருவது குறித்த தகவல் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது. தொலைபேசியின் வாயிலாக ஏற்கனவே எதிரியின் வழக்கறிஞருக்கு நேற்றைய தினமே தகவல் கொடுக்கப்பட்டுவிட்டது. இன்றைய தினம் ஆஜர் எதிரி அவருடைய இளம் வழக்கறிஞரை தம்முடைய மூத்த வழக்கறிஞர் சேலத்திற்கு இறப்பிற்கு சென்றிருப்பதாகவும் மனுதாக்கல் செய்து குறுக்கு விசாரணை செய்துகொள்வதாக தெரிவித்தார். இருப்பினும் **வினோத்குமார் என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பில் சாட்சிகளை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்யவேண்டும்** என்றும் உத்தரவிட்டிருப்பதை எடுத்து கூறியதற்கு ஆஜர் எதிரிகளும் குறுக்குவிசாரணை செய்யவில்லை என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார். எனவே அ.சா.2 ன் சாட்சியம் முடிக்கப்பட்டது)

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2024.12.18 15:41:13 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 75 of 2022 |

| | | |
|---|---|---|
| Depositions of PW - 3 witness for ________ | { | Prosecution<br>Defence<br>Court |

Name : சதீஸ்குமார்

Father's Name : த/பெ. பாஸ்கரன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of December** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு இளம் வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பாரதிபுரத்தில் வசித்து ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். எதிரிகள் அனைவரையும் சம்பவத்திற்கு பின்னர் தான் எனக்கு தெரியும்.

2. கடந்த 01.01.2020ம் தேதியன்றுமாலை சுமார் 06.30 மணியளவில் நான் பாப்பம்பட்டி பிரிவில் இருந்தபோது என்னுடைய நண்பர் செந்தில்குமார் அசா.2 என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னை உடனடியாக பள்ளபாளையம் பஞ்சாயத்து அருகே வருமாறு கூறினார். நான் அங்கு நின்று கொண்டிருந்தபோது 10 நிமிடம் கழித்து

ஒரு வெள்ளை நிற ஸ்கார்பியோ கார் வந்தது.

3. கதவை திறந்து தள்ளி விட்டது மட்டும் தெரிந்தது. என்னுடைய நண்பர் செந்தில்குமாரை தான் தள்ளிவிட்டார்கள். உடனே ஸ்கார்பியோ கார் போயிவிட்டது. என்னுடைய நண்பர் அவரை அவருடைய வீட்டிற்கு கூட்டிட்டு போகுமாறு கூறினார். ஆனால் நான் அவரை கோவை அரசு மருத்துவமனைக்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன். அவருக்கு முகம் எல்லாம் வீங்கி இருந்தது. ரத்த காயமாக இருந்தது. என்னவென்று விசாரித்ததற்கு காரில் கூட்டிட்டு போயி அடித்து விட்டதாக கூறினார்.

4. மேலும் விசாரித்தற்கு 1 ம் தேதியன்று காரில் வந்து அவருடைய வண்டியில் இடித்து விட்டு போனதாகவும் அதை கேட்டதற்கு அடித்திருப்பார்கள் போல் உள்ளது என்று கூறினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி ஆஜர். எதிரியின் இளம் வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை வருவது குறித்த தகவல் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது. தொலைபேசியின் வாயிலாக ஏற்கனவே எதிரியின் வழக்கறிஞருக்கு நேற்றைய தினமே தகவல் கொடுக்கப்பட்டுவிட்டது. இன்றைய தினம் ஆஜர் எதிரி அவருடைய இளம் வழக்கறிஞரை தம்முடைய மூத்த வழக்கறிஞர் சேலத்திற்கு இறப்பிற்கு சென்றிருப்பதாகவும் மனுதாக்கல் செய்து குறுக்கு விசாரணை செய்துகொள்வதாக தெரிவித்தார். இருப்பினும் **வினோத்குமார் என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பில் சாட்சிகளை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்யவேண்டும்** என்றும் உத்தரவிட்டிருப்பதை எடுத்து கூறியதற்கு ஆஜர் எதிரிகளும் குறுக்குவிசாரணை செய்யவில்லை என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார். எனவே அ.சா.3 ன் சாட்சியம் முடிக்கப்பட்டது)

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2024.12.18 15:41:21 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**